செ.கு. எண் :- 206

நாள் :- 02.08.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**அறிக்கை - 2.8.2013**

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், திருநகர் C.S.ராமாச்சாரியார் மெட்ரிக்குலேஷன் பள்ளியைச் சேர்ந்த செல்வன் P. தேவ் ஆனந்த், செல்வன் R.விஷ்ணுதரன், செல்வன் N. சதீஷ்குமார் மற்றும் செல்வன் S. பரமேஸ்வரன் ஆகிய நான்கு மாணவர்கள் 12.7.2013 அன்று தூத்துக்குடி துறைமுக கடல் பகுதியில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த மாணவர்கள் தேவ் ஆனந்த், விஷ்ணுதரன், சதீஷ்குமார் மற்றும் பரமேஸ்வரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்கள் தேவ் ஆனந்த், விஷ்ணுதரன், சதீஷ்குமார் மற்றும் பரமேஸ்வரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9